# துணை வேந்தர்கள் நியமனத்தில் ஒரு வாரத்துக்குள் தீர்வு காணாவிட்டால் நாங்களே தீர்த்து வைப்போம்: கவர்னருக்கு சுப்ரீம் கோர்ட் ‘கெடு’

புதுடெல்லி, ஜன.18

**தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்கள் நியமனத்தில் நிலவும் பிரச்சினைக்கு ஒரு வாரத்துக்குள் (22ந் தேதிக்குள்) தீர்வு காணாவிட்டால் நாங்களே தீர்த்து வைப்போம் என சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.**

தமிழக கவர்னர் ஆர்.என். ரவிக்கும், தமிழக அரசுக்குமான மோதல் போக்கு தொடர்ந்து நீடித்து வருகிறது. தமிழக சட்டசபையில் நிறைவேற்றும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கவர்னர் கிடப்பில் போடுகிறார் என்ற குற்றச்சாட்டை தமிழக அரசு முன்வைத்து வருகிறது.

எனவே குறிப்பிட்ட கால வரம்புக்குள் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க கவர்னருக்கு உத்தரவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சுப்ரீம் கோர்ட்டில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்து இருந்தது.

வழக்கை முன்னதாக விசாரித்த சுப்ரீம் கோர்ட், ‘கவர்னர் என்பவர் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசுக்கு கட்டுப்பட்டவர். இதுபோன்ற விவகாரங்களில் எல்லாம் சுப்ரீம் கோர்ட் தலையிட வேண்டும் என்று கவர்னர் நினைக்கிறாரா?’ என்று கூறியதுடன் கண்டனமும் தெரிவித்து இருந்தது. அதைத்தொடர்ந்து விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

## புதிய மனு

இந்த நிலையில், தமிழ்நாடு அரசு சார்பில் ஒரு புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது. அதன் விவரம் வருமாறு:–

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக திருத்த மசோதா, தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழக திருத்த மசோதா, பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா, சென்னை பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா, தமிழ்நாட்டில் ஆயுஷ் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தும் மசோதா, தமிழ்நாடு அம்பேத்கர் பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா, தமிழ் பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா உள்ளிட்ட 12 மசோதாக்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்.

தமிழ்நாடு அமைச்சரவையின் ஆலோசனைக்கு பிறகும், 10 மசோதாக்களை ஜனாதிபதியின் பரிசீலனைக்காக கவர்னர் அனுப்பி வைத்திருக்கக்கூடாது. இது சட்டவிரோதமானது. சுப்ரீம் கோர்ட்டில் நடைபெறும் விசாரணையை தடுக்கும் நோக்கில் கவர்னர் செயல்பட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, 7 மாசோதாக்களுக்கு கவர்னரின் ஆலோசனைப்படி ஒப்புதல் அளிப்பதை ஜனாதிபதி நிறுத்தி வைத்துள்ளார். ஒரு மசோதாவுக்கும் மட்டும் ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளார். மீதமுள்ள 2 மசோதாக்களும் ஜனாதிபதி ஒப்புதலுக்காக காத்திருக்கின்றன. 10 மசோதாக்கள் தொடர்பான விவகாரம் கோர்ட் விசாரணையில் இருந்தபோது கவர்னரும், மத்திய அரசும் தலையிட்டிருப்பது சுப்ரீம் கோர்ட்டையும், அரசியல் அமைப்புச் சட்டத்தையும் மதிக்கவில்லை என்பதை காட்டுகிறது.

## அரசமைப்பு சட்டத்துக்கு விரோதம்

தமிழ்நாடு அரசின் மனுவை பலனற்று போக செய்யவும், விசாரணையில் தோல்வியுறச் செய்யும் நோக்கிலும் கவர்னரும், மத்திய அரசும் மரியாதையற்ற வகையில் அரசமைப்பு சட்டத்துக்கு விரோதமாக நடந்து கொண்டுள்ளனர்.

மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் தமிழ்நாடு முதலமைச்சரை கவர்னர் அழைத்துப் பேசி தீர்வு காண வேண்டும் என சுப்ரீம் கோர்ட் கடந்த 2023ம் ஆண்டு டிசம்பர் 1ந் தேதி தெரிவித்தது.

அதன் அடிப்படையிலும், கவர்னர் அழைத்ததன் பேரிலும் முதலமைச்சரும் கவர்னர் மாளிகைக்கு தேநீர் விருந்துக்கு டிசம்பர் 30ம் தேதி சென்றார். அமைச்சரவையின் ஆலோசனையின்படி கவர்னர் நடக்க வேண்டும் என்பதையும் கோரிக்கை மனுவில் தெரிவித்தார்.

முதலமைச்சருடனான சந்திப்புக்கு பிறகும் கவர்னர் இந்த விவகாரம் தொடர்பான வழக்கை பலனற்றதாகிவிட முயற்சி செய்தததுடன், முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரும்அனுமதியைவழங்காமலும், 4 கைதிகளின் முன்விடுதலை தொடர்பான கோப்புகள் குறித்து முடிவெடுக்காமலும் உள்ளார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் பொன்முடி குற்றவாளி என்ற தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் நிறுத்திவைத்ததைத் தொடர்ந்து அவருக்கு மீண்டும் பதவிப் பிராமாணம் செய்து வைக்க கவர்னருக்கு முதலமைச்சர் கடந்த மார்ச் 23ந் தேதி கடிதம் எழுதினார்.

இருப்பினும் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்க கவர்னர் மறுத்துவிட்டார். குற்றவாளி என்ற தீர்ப்புதான் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதே தவிர, ரத்து செய்யப்படவில்லை என்ற சுப்ரீம் கோர்ட் உத்தரவுக்கு புதிய விளக்கம் அளித்தார்.

அரசியல் அமைப்பு சட்ட பண்புகளுக்கு கவர்னர் மதிப்பளிக்க வில்லை. பதவிப் பிரமாணம் செய்து வைக்க மறுத்ததற்கு எதிராகவும், பதவி பிரமாணம் செய்து வைக்க கவர்னருக்கு உத்தரவிடக் கோரியும் சுப்ரீம் கோர்ட்டில் இடையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து, பதவி பிராமாணம் செய்து வைக்க கவர்னர் அழைப்புவிடுத்தார்.

எனவே, 10 மசோதாக்களையும் பரிசீலனைக்காக ஜனாதிபதிக்கு கவர்னர் அனுப்பிவைத்த முடிவு சட்ட விரோதமானது என்றும், அரசியல் அமைப்புச்சட்டத்தின் 200 வது பிரிவை மீறிய செயல் என்றும் அறிவிக்க வேண்டும். மசோதாக்கள் தொடர்பாக ஜனாதிபதி எடுத்த முடிவுகள் செல்லாது என அறிவிக்க வேண்டும். 10 மசோதாக்களையும் மீண்டும் கவர்னரிடம் மத்திய அரசு ஒப்படைக்கவும், அவற்றுக்கு அரசியல் அமைப்புச்சட்டத்தின் 200 வது பிரிவின்படி ஒப்புதல் அளிக்கவும் கவர்னருக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது, துணைவேந்தர்கள் நியமனத்தில் வேந்தரான கவர்னரின் செயல்பாடுகள் தொடர்பாக அவருக்கு எதிரான தமிழ்நாடு அரசின் மனுக்கள் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் ஜே.பி. பார்த்திவாலா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தன.

இந்த மனுக்கள் மீதான விசாரணையை ஒரு வாரத்துக்கு தள்ளி வைக்குமாறு மத்திய அரசின் அட்டார்னி ஜெனரல் ஆர். வெங்கடரமணி முறையிட்டார்.

அப்போது தமிழ்நாடு அரசின் சார்பில் வக்கீல் சபரீஷ் சுப்ரமணியனுடன் மூத்த வக்கீல்கள் பி.வில்சன், அபிஷேக் மனு சிங்வி, முகுல் ரோத்தகி ஆஜராகி, கூடுதல் விவரங்கள் அடங்கிய மனுவை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும். கூடுதல் மனுவுக்கு பதில் அளிக்க உத்தரவிட வேண்டும் தெரிவித்தனர்.

இதற்கு மத்திய அரசின் அட்டார்னி ஜெனரல், கூடுதல் மனுவை தாக்கல் செய்ய எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்ததுடன், விசாரணையை ஒரு வாரத்துக்கு தள்ளி வைக்குமாறு கோரினார்.

## 22–ந்தேதி இறுதி விசாரணை

இந்த விவகாரத்துக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லையா என நீதிபதிகள் கேட்டபோது, இன்னும் தீர்வு காணப்படவில்லை, துணைவேந்தர்கள் நியமனங்களை மேற்கொள்ள முடியாத நிலை கடந்த 3 ஆண்டுகளாக தொடர்வதாகவும், முட்டுக்கட்டை இருப்பதாகவும் மூத்த வக்கீல் பி.வில்சன் வாதிட்டார்.

தமிழ்நாட்டில் துணைவேந்தர்கள் நியமனத்தில் நிலவும் முட்டுக்கட்டை அடுத்த விசாரணைக்குள் தீர்ந்துவிட்டால் நல்லது, இல்லையென்றால் தீர்த்து வைக்கப்படும். ரிட் மனுக்களில் திருத்தம் ஏற்கப்படுகிறது என்று நீதிபதிகள் தெரிவித்தனர். இதையடுத்து இறுதி விசாரணை வருகிற 22ந் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டது.

# டெல்லியில் 5 நாள் வாகனக் கண்காட்சி: பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

## உலகம் முழுவதும் இருந்து 5 லட்சம் பேர் பங்கேற்பு

புதுடெல்லி, ஜன.18

டெல்லியில் தொழில்துறை சங்கங்களின் ஏற்பாட்டில் டெல்லியில் ‘பாரத் மொபிலிட்டி குளோபல் எக்ஸ்போ 2025’ என்ற பெயரில் 5 நாள் வாகன கண்காட்சியை நேற்று பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் ஆதரவுடன் கண்காட்சி நடக்கிறது.

நேற்று முதல் 22ந் தேதி வரை 5 நாட்கள் கண்காட்சி நடக்கிறது. டெல்லியில், பாரத் மண்டபம், யசோ பூமி, டெல்லி அருகே நொய்டாவில் டெல்லி கண்காட்சி மையம் ஆகிய 3 இடங்களில் கண்காட்சி நடக்கிறது.

கண்காட்சியில் 5,100 சர்வதேச பங்கேற்பாளர்கள் மட்டுமின்றி, உலகம் முழுவதும் இருந்து 5 லட்சம் பார்வையாளர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டெல்லி பாரத் மண்டபத்தில் நடந்த கண்காட்சியை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த வாகனங்களை அவர் சுற்றிப் பார்த்தார்.

பின்னர் கண்காட்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:

வாகனங்கள் துறையில் நல்ல எதிர்காலத்தை காண விரும்பும் ஒவ்வொரு முதலீட்டாளருக்கும் சிறப்பான இடம் இந்தியாதான். ‘இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள், உலகத்துக்காக உற்பத்தி செய்யுங்கள்’ என்ற தாரக மந்திரத்துடன் ஒவ்வொருரையும் மத்திய அரசு ஊக்குவித்து வருகிறது. முழு ஆதரவு அளித்து வருகிறது.

## ஒன்றரை லட்சம் வேலைவாய்ப்புகள்

இந்தியாவின் வாகன தொழில் வளர்ச்சி அடைந்ததற்கு ‘மேக் இன் இந்தியா’ திட்டம் முக்கிய பங்கு வகித்தது. செயல்பாடு சார்ந்த ஊக்கத்தொகை திட்டங்கள், ‘மேக் இன் இந்தியா’ திட்டத்துக்கு புதிய வேகம் அளித்தன. ரூ.2 லட்சத்து 25 ஆயிரம் கோடி மதிப்புள்ள வாகனங்கள் விற்பனை ஆகின. ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகின.

இளைஞர்களின் ஆற்றலால் உந்தப்பட்டு, இந்திய ஆட்டோமொபைல் துறை முன்எப்போதும் இல்லாத மாற்றத்தை கண்டுள்ளது. கடந்த ஆண்டில், இந்திய வாகனங்கள் தொழில், சுமார் 12 சதவீதம் வளர்ச்சி அடைந்தது. ஏற்றுமதி அதிகரித்தது.

இந்தியாவில் ஆண்டுதோறும் விற்பனை ஆகும் கார்கள் எண்ணிக்கை, பல நாடுகளின் மக்கள் தொகையை விஞ்சி விட்டது. ஓராண்டில் 2½ கோடி கார்கள் விற்பனை ஆகியிருப்பது, இந்தியாவில் காருக்கான தேவை அதிகரித்து வருவதை காட்டுகிறது.

தற்போது, பொருளாதாரத்தில் 5வது இடத்திலும், பயணிகள் வாகன சந்தையில் 3வது இடத்திலும் இந்தியா உள்ளது. பொருளாதாரத்தில் 3வது இடத்துக்கு இந்தியா முன்னேறி வரும் நிலையில், இந்தியாவின் வாகன சந்தையும் எப்போதும் இல்லாத மாற்றத்தையும், விரிவாக்கத்தையும் கண்டு வருகிறது.

இந்தியாவில் மின்சார வாகனங்கள் வேகமான வளர்ச்சி பெற்றுள்ளன. கடந்த 10 ஆண்டுகளில், இவற்றின் விற்பனை 640 மடங்கு உயர்ந்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பு, ஆண்டுக்கு 2,600 மின்சார வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டன. ஆனால், கடந்த ஆண்டு 16 லட்சத்து 80 ஆயிரம் மின்சார வாகனங்கள் விற்பனை ஆகியுள்ளன.

2030ம் ஆண்டுக்குள், இந்தியாவில் மின்சார வாகனங்கள் எண்ணிக்கை 8 மடங்கு அதிகரிக்கும்.

இந்தியாவில் ஆட்டோமொபைல் துறை வளர்ச்சிக்கு ரத்தன் டாடா, ஒசாமு சுசுகி ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர். வாகனங்கள் வாங்கும் நடுத்தர வகுப்பினரின் கனவை நனவாக்கினர்.

இவ்வாறு அவர் பேசினார்.

# சிவகங்கை மாவட்டத்தில் 21, 22ந் தேதிகளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு

சென்னை, ஜன.18

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகிற 21, 22ந் தேதிகளில் கள ஆய்வுக்காக சிவகங்கை மாவட்டத்திற்கு பயணம் மேற்கொள்கிறார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு மாவட்டங்களுக்கு சென்று கள ஆய்வு மேற்கொண்டு வருகிறார். மேலும், அங்கு நடக்கும் அரசு விழாக்களில் பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். ஏற்கனவே கோவை, ஈரோடு, வேலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அவர் கள ஆய்வுகளை மேற்கொண்டார்.

இந்த நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகிற 21ந் தேதி காலை சென்னையில் இருந்து விமான மூலம் திருச்சி செல்கிறார். பின்னர் அங்கிருந்து சாலை மார்க்கமாக சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு செல்கிறார்.

பின்னர், முன்னாள் மத்திய மந்திரியும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான ப.சிதம்பரத்தின் ஏற்பாட்டில், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை முதலமைச்சர் திறந்து வைக்கிறார்.

21ந் தேதி மாலை காரைக்குடியில் நடைபெறும் தி.மு.க. கட்சி நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு உரையாற்றுகிறார். அன்றிரவு அவர் காரைக்குடியில் தங்குகிறார்.

மறுநாள் 22ந் தேதி சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் நடைபெறும் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். அந்த விழாவில், பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். முன்னதாக அவர் கள ஆய்வை மேற்கொள்கிறார்.

பின்னர் மதுரைக்கு சென்று அங்கிருந்து விமானம் மூலம் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை திரும்ப உள்ளார்.

*பிப்ரவரி 1ந்தேதி பட்ஜெட் தாக்கல்*

# நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஜனாதிபதி உரையுடன் 31ந்தேதி தொடக்கம்

புதுடெல்லி, ஜன.18–

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் ஜனாதிபதி உரையுடன் வருகிற 31ந்தேதி தொடங்குவதாக தகவல் வெளியாகி உள்ளது. இதில் பிப்ரவரி 1ந்தேதி மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது.

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறுவது வழக்கம். ஆண்டின் முதல் கூட்டத்தொடர் என்பதால் ஜனாதிபதி உரையுடன் இந்த தொடர் தொடங்கும்.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டத்தொடர் வருகிற 31ந்தேதி தொடங்கும் என தகவல் வெளியாகி இருக்கிறது. அன்றைய தினம் இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு உரையாற்றுகிறார்.

பின்னர் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. இதை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.

மறுநாள் அதாவது பிப்ரவரி 1ந்தேதி 2025–26ம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார். இது நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்யும் 8வது பட்ஜெட் ஆகும்.

பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் பகுதி பிப்ரவரி 13ந்தேதி வரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்படுகிறது.

பின்னர் பிரதமரின் பதிலுரையுடன் இந்த தொடரின் முதல் பகுதி நிறைவு பெறும்.

பட்ஜெட் தொடரின் 2வது பகுதி மார்ச் 2வது வாரத்தில் தொடங்கி ஏப்ரல் முதல் வாரத்தில் நிறைவடையும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்து உள்ளன. அந்த வகையில் மார்ச் 10ந்தேதி முதல் ஏப்ரல் 4ந்தேதி வரை நடைபெறும் என தெரிகிறது.

# அனைத்து விதமான கணக்குகள், லாக்கர் வசதிக்கு ‘வாரிசுதாரர்’ கட்டாயம்: ரிசர்வ் வங்கி உத்தரவு

மும்பை, ஜன.18

வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்கள் இறந்து விட்டால், அந்த கணக்கில் உள்ள பணத்தை அவரது குடும்பத்தினர் பெறுவதில் சிரமம் ஏற்படுகிறது. இதற்கு அந்த கணக்குதாரர் தனக்குப்பின் யாருக்கு அந்த பணம் கிடைக்க வேண்டும் என்பதை குறிக்கும் வாரிசுதாரரை (நாமினி) ஏற்கனவே தெரிவிக்காததும் காரணமாக அமைந்து விடுகிறது.

எனவே அனைத்து வங்கி கணக்குகள் மற்றும் லாக்கர் வசதிக்கு வாரிசுதாரரை குறிப்பிடுவதை ரிசர்வ் வங்கி கட்டாயமாக்கி உள்ளது. ஏற்கனவே இருக்கும் கணக்குகளுக்கும், புதிதாக தொடங்கப்படும் கணக்குகளுக்கும் இது பொருந்தும் என அறிவித்து உள்ளது. மேலும் வங்கி கணக்கு தொடங்கும்போது வாரிசுதாரரை சேர்க்கும் வகையில் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என கூறியுள்ள ரிசர்வ் வங்கி, ஏற்கனவே உள்ள விண்ணப்பங்களில் அது குறித்த பிரிவு இல்லை என்றால் புதிதாக சேர்க்கவும் அறிவுறுத்தி உள்ளது.


**NAME CHANGE**

**Army No: 15424357P, Rank: Hav, D.Dhanasivamani son of Thiru Dhanasekaran, Born on 5th May 1986 (District of Birth: Sivagangai residing at No. 1/86. North Street, Munaivendi Sivagangai - 623 701 shall henceforth be known as DHANASIVAMANI D**

**D.Dhanasivamani**

**BEFORE THE HON'BLE X ASST CITY CIVIL COURT AT CHENNAI**
**E.P.No. 3822 of 2022**
**IN**
**ARC. No. 808 of 2012**

Margadarsi Chits Private Limited Represented by its Foreman ...Petitioner/Decree Holder
- Vs -
D. Karthikeyan and Others ...Respondents/ Judgement Debtors

To,
D. Revathi - JDS,
W/o. K. Karthick,
Flat No. 2, Ground Floor,
Thangam Flats,
Old Door No. 96,97,98,
New Door No. 88, Patel Road,
Perambur, Chennai -600 011.

Whereas the above Execution Petition filed to Attach and Sale of your Immovable Property, the Hon'ble X Assistant Judge ordered notice to you returnable by 28.01.2025 in the Sale Papers filed to bring your Property into Public auction. Please take notice and appear on 28.01.2025 at 10:30 am before the Hon'ble X Assistant City Civil Court, Chennai either personally or through advocate failing which the matter will be decided in your absence.

**M.DURAIRAJ**
Counsel For Petitioner/ Decree Holder

**BEFORE THE XX ASSISTANT CITY CIVIL COURT AT CHENNAI**
**I.A.Nos.4 of 2025**
**In**
**O.S.No. 4298 /2024**

D.Shanthi,
Reptd. By her Power Agent
D.Krishnaraj
C-707, S.I.S. Queens Town,
Kayirambedu, Guduvancherry,
Chennai-603202 ...Plaintiff
Vs
1. M/s Nithanya Enterprises,
No.27, Railway Station Road,
Selvaraj Nagar, Urapakkam
Chengalput District
2. Thangadurai
No.27, Railway Station Road,
Selvaraj Nagar, Urapakkam
Chengalput District ...Defendants

Please take notice in the above matter, that the Plaintiff has filed the above O.S. against you for vacating the rented portion, handing over possession of the said property, and to pay compensation.

The Hon'ble XV Assistant City Civil Court at Chennai has ordered notice to you returnable by 29-01-2025. Hence you are requested to appear before the above said court on the above said date at 10.30 A.M., either in person or through your counsel, failing which the matter will be heard and decided in your absence and you will be set ex parte.

**DR.R.SAMPATHKUMAR**
Advocate /Counsel for Plaintiff
9444123939

**IN THE COURT OF XV ASST CITY CIVIL COURT AT CHENNAI**
**O.S. No.3542 of 2023**

State Bank of India ... Plaintiff
Vs
Mr.Anthoni Britto ... Defendant

To,
Mr.Anthoni Britto,
S/o.Mr.Sathyanathan,
No.106/3, R C School Street,
Kanakkankuppam,
Gingee, Villupuram- 604 151.

The Plaintiff filed the above suit in O.S.No.3542 of 2023 before the Hon'ble XVth Asst City Civil Court, at Chennai for the recovery of money. The Hon'ble Court ordered notice through Paper Publication on 07.01.2025 for appearance of the Defendant. Then the matter was posted on 10.02.2025. Hence kindly appear on 10.02.2025 before this Hon'ble Court at 10.30 am., failing which the matter will be decided on merits in your absence.

I.JESU
COUNSEL FOR PLAINTIFF

**IN THE COURT OF DISTRICT MUNSIFF CUM JM AT SHOLINGANALLUR**
**O.S.NO. 655 / 2024**

Housing Development Finance Corporation Ltd
Rep by Mohan Padmanaban ... Plaintiff/Petitioner
Vs.
D1) S.Kumaran,
S/o. Susindra Bose,
No.38A/B, Kuberanagar North,
Vijaya Nagar, Velachery,
Chennai - 42
D2) P.Saravanan,No.2/187
Rakesh Flat,No.137,
Thilagar Avenue 1st Main Road,
Balaiah Garden, Madipakkam,
Chennai -91
... Respondents/Defendants

**NOTICE**

Please take notice that the above case is posted on 04.02.2025 before the Hon'ble Munsiff Court at Sholinganallur your appearance, kindly attend the above said court on 04.02.2025 at 10.30 a.m. before the above the Hon'ble above said court. Failing which the matter will be heard in your absence set ex-parte.

**M. V. Hariram**
**M. Padmanaban**
**R. Renukadevi**
Counsel for The Petitioner

**7வது கூடுதல் குடும்பநல நீதிமன்றம், சென்னை**
O.P. NO. 3595/2024

*S. கார்த்திக்நாராயணன்* –மனுதாரர்
எதிர்
*திருமதி. K. சாரதா* – எதிர்மனுதாரர்

பெறுநர்
திருமதி. K. சாரதா
க/பெ. S. கார்த்திக்நாராயணன்
நெ. B–2, கனால் பேங்க் ரோடு,
மந்தைவெளி, சென்னை–600 028 – எதிர்மனுதாரர்

மேற்படி மனுதாரராகிய நான் தங்களுக்கு எதிராக விவாகரத்துக் கோரி சென்னை 7வது கூடுதல் குடும்பநல நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேற்கண்ட அசல் மனு தங்கள் வருகைக்காக வருகின்ற 19.02.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று தாங்கள் மேற்கண்ட குடும்பநல நீதிமன்றத்தில் காலை 10.15 மணியளவில் ஆஜராக வேண்டும். ஆஜராகத் தவறினால் மேற்படி மனு ஒருதலைபட்சமாய் தீர்மானிக்கப்படும்.

**S. கார்த்திக்நாராயணன்**
த/பெ.T.V.சந்தானம்,
மனை எண்.65, கதவு எண்.105,
1வது மாடி, யுனைடெட்
ரெசிடென்சி அப்பார்ட்மெண்ட்,
நீலாத்திரி நகர்,
15வது குறுக்குத் தெரு,
எலக்ட்ரானிக்ஸ் நகரம்,
பெங்களூரு–560100
மனுதாரர்.

**பங்குச் சான்றிதழ்கள் காணாமல் போனது பற்றிய அறிவிப்பு**
(IEPF ஆணையத்திடம் இருந்து கோருவதற்கு)

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியத்தின் (கணக்கியல், தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திரும்பப்பெறுதல்) 2016–ன் விதி 8ன் கீழ், எங்கள் பெயரில் பதிவுசெய்யப்பட்ட மெசர்ஸ் ஈசாப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட பின்வரும் பங்குச் சான்றிதழ்கள் தொலைந்துவிட்டன/காணாமல் போய்விட்டன என்று இதன்மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

| பங்குதாரர்கள் பெயர் | போலியோ எண் | பங்குகள் எண்ணிக்கை | சான்றிதழ் எண்கள் | குறியீட்டு எண்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | முதல் | வரை |
| லட்சுமி ராமநாதன் | L01258 | 100 | 205435 | 14910375 - 14910474 | |

பத்திரங்கள் தொடர்பாக உரிமைகோரல் வைத்திருக்கும் எந்தவொரு நபரும், நிறுவனத்தின் பதிவு அலுவலகம், மெசர்ஸ் ஈசாப் இந்தியா லிமிடெட், மனை எண்.13, 3வது பிரதான சாலை, தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை 600 058, மின்னஞ்சல்: chaithanya.lakshmi@esab.co.in அல்லது அதன் பங்கு பரிமாற்ற முகவர், இன்டகிரேட்டட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், "கென்சஸ் டவர்ஸ்", 2வது தளம், எண்.1 ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி நகர், சென்னை 600 017 , மின்னஞ்சல் : sriams@integratedindia.in என்ற முகவரியில் அத்தகைய உரிமைகோரலை ஆதாரத்துடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும், இல்லையெனில் பதிவுதாரர்களுக்கு சாதகமாக உரிமைகோரலைத் தீர்க்க நிறுவனம் நடவடிக்கையை தொடரும். அதன் பிறகு நிறுவனம் எந்தவொரு கோரிக்கையையும் ஏற்காது. மேலே கூறப்பட்ட பங்குகளை கையாளும் எந்தவொரு நபரும் தங்கள் சொந்த பொறுப்பில் அவ்வாறு செய்வார்கள்.

**இடம்: சென்னை, தமிழ்நாடு 600 058** — **பங்குதாரர் பெயர்**
**நாள் : 17.01.2025** — **லட்சுமி ராமநாதன்**

**பங்குதாரரின் முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி**
**1181, ஜெஸெரோ கிரெஸ், ஓக்வில்லி, ஆன், எல்6எச் 0பி4, கனடா**
lakshmiramanathan711@gmail.com

**டிவிஎஸ் மோட்டார் கம்பெனி லிமிடெட்டின்**
**பங்கு சான்றிதழ் காணாமல் போனது பற்றிய அறிவிப்பு**
**(ஐஇபிஎப் ஆணையத்திடமிருந்து உரிமை கோருவதற்கு)**

டிவிஎஸ் மோட்டார் கம்பெனி லிமிடெட்டின் பின்வரும் பங்குச் சான்றிதழ்(கள்) தொலைந்துவிட்டன அல்லது காணாமல் போய்விட்டன அல்லது திருடு போய்விட்டன. மேலும் பதிவுசெய்த உரிமையாளரின் சட்டப்பூர்வ வாரிசுகள் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்திற்கு (IEPF) மாற்றப்பட்ட பங்குகள் மற்றும் ஈவுத்தொகைகளைத் திரும்பப் பெறுவதற்காக IEPF ஆணையத்திற்கு விண்ணப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்

| போலியோ எண் | பங்குதாரர்கள் பெயர் | பங்குகள் எண்ணிக்கை | பங்கு சான்றிதழ் எண்(கள்) | குறியீட்டு எண்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | முதல் | வரை |
| K2123 | கண்டேராவ் மகாதேவ் குல்கர்னி சுவாதி கண்டேராவ் குல்கர்னி | 500 | 2807 | 2746461 | 2746960 |

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தின் (கணக்கியல், தணிக்கை, பரிமாற்றம் மற்றும் பணத்தைத் திரும்பப் பெறுதல்) விதிகள், 2017ன் அட்டவணை III இன் படி, அவ்வப்போது திருத்தப்பட்டபடி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

மேற்கூறிய பங்குச் சான்றிதழை எந்த வகையிலும் வாங்கவோ அல்லது கையாளவோ கூடாது என்று பொதுமக்கள் இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேற்கூறப்பட்ட பங்குச் சான்றிதழ் (கள்) தொடர்பாக ஏதேனும் உரிமைகோரலைக் கொண்ட எந்தவொரு நபரும் அத்தகைய உரிமைகோரலை நிறுவனத்திடம், அதன் பதிவு அலுவலகம், M/s. டிவிஎஸ் மோட்டார் கம்பெனி லிமிடெட், “சைதன்யா”, எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006 (மின்னஞ்சல் முகவரி: contactus@tvsmotor.com) அல்லது அதன் பங்கு பரிமாற்ற முகவர்கள், இன்டகிரேட்டட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், “கென்சஸ் டவர்ஸ்”, 2வது தளம், எண்.1 ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை – 600 017,(மின்னஞ்சல் முகவரி: srirams@integratedindia.in) என்ற முகவரியில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும், அதன் பிறகு எந்த உரிமைகோரலும் ஏற்றுக்கொள்ளப்படாது மற்றும் பதிவுசெய்த உரிமையாளரின் சட்டப்பூர்வ வாரிசு(கள்) பங்குகள் மற்றும் ஈவுத்தொகைகளை திரும்பப்பெற IEPF க்கு விண்ணப்பிப்பார்கள். மேலே கூறப்பட்ட பங்குகளை கையாளும் எந்தவொரு நபரும் தங்கள் சொந்த பொறுப்பில் மேற்கொள்வார்கள்.

**கண்டேராவ் மகாதேவ் குல்கர்னி**
**சுவாதி கண்டேராவ் குல்கர்னி**
**இடம் : சென்னை** — **C3/29, சம்ருத்தி சொசைட்டி, பாபுராவ் பருலேகர் மார்க், காவல் நிலையம் எதிரில்,**
**தேதி : 18.01.2025** — **தாதர் மேற்கு, மும்பை, பவானி சங்கர் ரோடு, மகாராஷ்டிரா 400028**

kotak Kotak Mahindra Bank — **ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை**

**கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G– பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051. கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. லேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் அருகில்

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு.** பின்னிபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "பின்பிஎச்எப்எல்" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 14.01.2020 அன்று பின்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி "பின்பிஎச்எப்எல்" என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.NHL/OMR/0817/423839ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி **திரு. ஆதித்தன் டி, M/s. சூர்யா மார்க்கெட்டிங் & திருமதி. கௌசல்யா ஆர்.** ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 15.01.2025 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.3,28,54,488/–(ரூபாய் மூன்று கோடியே இருபத்தெட்டு லட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து நானூற்று எண்பத்தெட்டு மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையிலும் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

| விவரங்கள் | விவரங்கள் |
|---|---|
| ஏலத் தேதி | 25.02.2025 |
| ஏலம் நடைபெறும் நேரம் | மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் |
| ரிசர்வ் விலை | **ரூ.1,21,00,000/-** (ரூபாய் ஒரு கோடியே இருபத்தோரு லட்சம் மட்டும்) |
| டேவணித் தொகை டெபாசிட் (EMD) | **ரூ.12,10,000/-** (ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) |
| Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 24.02.2025 அன்று மாலை 6:00 மணி வரை (இந்திய நேரப்படி) |
| ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் மற்றும் வீடு. புதுச்சேரி பதிவு மாவட்டம், உழவர்கரை சார் பதிவு மாவட்டம், உழவர்கரை நகராட்சி எல்லை, கிராம எண்.35, உழவர்கரை வருவாய் கிராமம், மூலகுளம், திருமலை தாயார் நகர், முதல் பிரதான சாலை, ஆவணத்தின்படி ஆர்.எஸ்.எண்.111/3/A/5, தீர்வு நகலின்படி ஆர்.எஸ்.எண்.111/3/A/5, நில அளவை எண்.332 1/3 பகுதி, 331 பகுதி, 319 1/2 பகுதி, 319 2/2 பகுதி, 326 1/2 பகுதி, 320 பகுதி, 326 2/2 பகுதி, பட்டா எண்.639, அமிட்டம் எண்.1: விஸ்தீரணம் 3024 சதுர அடி மனை எண்.1, அமிட்டம் எண்.2: விஸ்தீரணம் : கிழக்கு மேற்கு வடக்குப் பக்கம் 28 அடி, தெற்குப் பக்கம் 05 அடி, தெற்கு வடக்காக 60 அடி, மொத்த பரப்பளவு 990 சதுர அடி, ஒதுக்கீடு மனை. மொத்தம் அமிட்டம் 1 மற்றும் 2 ஆகியவற்றின் விஸ்தீரணம் 4014 சதுர அடி மற்றும் ஆர்சிசி வீடு கட்டிடம் மற்றும் மின்சார சேவை இணைப்பு மற்றும் தண்ணீர் சேவை இணைப்பு உட்பட மற்றும் தற்போதைய தீர்வுப் பத்திரத்தின்படி ஆர்.எஸ்.எண்.111/3/ஏ/5/ஏ/19 மற்றும் எல்லைகள் : கிழக்கு: பாதை மற்றும் கிருபாகரன் நிலம், தெற்கு: புதிதாக போடப்பட்ட சாலை, வடக்கு: புதிதாக போடப்பட்ட சாலை, மேற்கே: கிருஷ்ண கவுண்டர் நிலம். | |
| தெரிந்தவரை வில்லங்கள் : இல்லை | |

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. சூரிய நாராயணன் பி (+91 9600222111)** மற்றும் **திரு. விஷால் ஆதிசேஷன்** (மொபைல் எண். +919941014660). தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+919152219751)ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங்க் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

**இடம் : பாண்டிச்சேரி** — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
**தேதி: 17.01.2025** — **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**